ஜனவரி 01, 2008
மலர் 3, இதழ் 1

# புத்தாண்டு சிறப்பு மலர்

# காமாக்ஷி தரிசனம்

ஸ்ரீ ஸ்வர்ண காமேஸ்வரி சேவா ஸங்க், ப.எண் 15, பு.எண் 13, 24வது தெரு, நங்கநல்லூர், சென்னை – 600 061, இந்தியா
http://www.kamakshiswami.org    sskssangh@yahoo.co.in    91- 44- 2232 4665



## ஸ்ரீலஸ்ரீ காமாக்ஷி சுவாமிகளின் அருள்மொழிகள்

- ★ கடவுள் இருப்பதை உணர உன் காரியங்களில் முழு கவனமும் நம்பிக்கையும் தேவை.
- ★ அன்பு இல்லாத ஞானம் நிச்சயம் இறைவனை உணர இயலாது.

## பதிப்பின் உள்ளே...

ஸ்ரீலஸ்ரீ காமாக்ஷி ஸ்வாமிகள் – புத்தாண்டு அருளுரை 1
ஸ்ரீலஸ்ரீ காமாக்ஷி ஸ்வாமிகள் – அருள்மொழிகள் 1
14வது நவராத்திரி விழா 2
ஸ்ரீலஸ்ரீ காமாக்ஷி சுவாமிகள் - சேவை 4
உதவிக்கு 4

## புத்தாண்டு நற்செய்தி

மனிதன் வாழ வேண்டி பல வழிகளில் ப்ரயத்தனப்பட்டு செம்மையாகத்தான் வாழ்கிறான், இருப்பினும் இன்றியமையாத ஒன்றான இறையருளையடைய ப்ரயத்தனப்படுவதில்லை. இறையருளை அடைய நல்ல குருமார்களைத்தேடி நல்லுபதேசம் பெற்று நல்வழி நடப்பதே நாம் இறைத்தொண்டினை செய்ய தகுதி பெறுகிறோம் என்பதை விடவும் செம்மையான வாழ்வை அடைகிறோம் என்பது உண்மை. நாம் ஒவ்வொருவரும் பழத்தினுள் இருந்து கொண்டு வண்டு எப்படி இதுதான் உலகம் என்று நினைக்கிறதோ அதைப்போல் நாம் ஒரு சிறு வட்டத்துக்குள்ளேயே இருந்து கொண்டு அதுதான் உலகமென வாழ்கிறோம். எந்த குருவை நாம் ஏற்றுக் கொள்கிறோமோ, ஏற்றுக் கொள்வதற்கு முன் திடமான ஆராய்ச்சியும் ஏற்றபின் திடமான நம்பிக்கையும் இருக்க வேண்டும். செம்மையான வாழ்வு என்பது இறையாண்மையோடு கூடிய பக்திநெறியோடு கூடியதான வாழ்க்கையாகத்தான் இருக்க வேண்டும். மேலும் மனித வாழ்க்கைக்கு மதம், இனம், மொழி இவை தேவையில்லை, அன்பு மட்டுமே போதுமானது. அன்பு என்பது நம் வாழ்வில் உயிரைப் போன்று மேலானது. அன்பு எங்கு பூரணமாயிருக்கிறதோ அங்கு அம்மன் பூரணமாய் இருப்பதை உணர முடியும்.

எங்கு நாம் வாழ்ந்தாலும் நம் கலாசாரம் உசந்ததானதால் அதை கடைபிடிப்பது அவசியம். சேவையாற்ற வந்த பிறகு நம் அனைவரின் குறிக்கோளும் இறைத்தாளினையே பற்றியிருக்க வேண்டும் குறிப்பாய் கலியுகத்தில் பகவத்சேவையே துரிதமான மோக்ஷ நிலைக்கு உகந்ததாகும் பொதுவாகவே ஒவ்வொரு ஆண்டு துவக்கத்திலும் நாம் ஒவ்வொருவரும் நம்மை பவித்ரமாக்கிக் கொள்ளும்படியான சத்கார்யத்தில் ஈடுபட்டு நம்முன் இருக்கும் அகந்தையை விலக்கி ஆன்ம ஒளியை பெருக்க உறுதி மொழி கொள்ள வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ காமாக்ஷி சுவாமிகள்

இணையதள முகவரி :

www.kamakshiswami.org

# 14வது நவராத்திரி விழா

ஸ்ரீலஸ்ரீ காமாட்சி சுவாமிகளின் அருளாசியுடன் ஸ்ரீ ஸ்வர்ண காமேஸ்வரி சேவா சங்கம், 14ம் ஆண்டு நவராத்திரி மஹோஸ்சவ திருவிழாவினை சென்னை நங்கநல்லூரில் உள்ள ஸ்ரீ செல்லம்மாள் வித்யாலயாவில் அக்டோபர் மாதம் 16ம் நாள் முதல் 19ம் நாள் வரை வெகு விமர்ச்சையாக நடத்தியது.





விழாவினை குருஜி ஸ்ரீலஸ்ரீ காசி விஸ்வநாதர் சுவாமிகளும் மற்றும் வித்வான் திரு.முத்துகுமாரசாமி தம்பிரான் சுவாமிகளும் இனிதே தொடங்கி வைத்தனர். சிறப்பு விருந்தினர்களாக திரு.T.பிச்சாண்டி IAS, திரு.G.சந்தானம் IAS, திரு.P.R.சம்பத் IAS மற்றும் திரு.குமாரசாமி IPS ஆகியோர் கலந்துக் கொண்டனர். ஸ்ரீ காமாட்சி சுவாமிகள், அவருடைய உரையில் நவராத்திரி விழாவின் பெருமைகளை பற்றியும், அம்பாளின் அருளை பெறும் வழிமுறைகளையும் மேலும் முக்தியைக் தரகூடிய குருபக்தியின் மேன்மையை பற்றியும் விவரித்தார்.



**குழு விவாதங்களுக்கு அணுகவும்**

Yahoo! at -

http://groups.yahoo.com/group/SSKSSangh

குருஜியின் கட்டளைக்கிணங்க, உலக மக்களின் நலம்கருதி, திரு.சங்கர தீட்சிதர் அவர்கள் பல ஹோமங்களையும் வேத பாராயணங்களையும் நடத்தினார். இதில் சிறப்பாக மஹாசண்டி ஹோமம் நடந்தேறியது.





இவ்விழாவில் இடம் பெற்றிருந்த வேத பாராயணம் பல வேத பண்டிதர்களால் சிறப்பாக செய்யப்பட்டது. அனைவரது நெஞ்சத்திலும் மிகவும் ஒரு புனித எண்ணத்தை ஏற்படுத்தியது. திரு.குப்புசாமி (முதன்மை வக்கீல்) அவர்கள் வேத பண்டிதர்களை கௌரவித்தார்.



விழாவின் சிறப்பம்சமாக காமாட்சி தேவியின் வீதிஉலா நங்கநல்லூர் மக்களுக்காக நடைபெற்றது.





விழாவில் பல பூஜைகளும் இடம் பெற்றிருந்தன. அவற்றில் சோடஸ மஹா லட்சுமி பூஜை (16 லட்சுமி தேவியை துதித்தல்), சஹஸ்ர நயன புஷ்பாஞ்சலி (1000 ஜோடி வெள்ளி கண்களால் காமாட்சி தேவியை துதித்தல்), சஹஸ்ர கமல புஷ்பாஞ்சலி (1000 தாமரை மலர்களால் தேவியை அர்ச்சித்தல்), 108 திருவிளக்கு பூஜை ஆகியவைகள் குறிப்பிடதக்கவை.





கர்நாடக இசை கச்சேரிகள், பல வித்வான்களால் சிறப்பாக நடத்தப்பட்டது. சிறப்பம்சமாக அன்னப்பிரசாதம் ஒவ்வொரு நாளும் நடந்தேறியது.



விழாவினை காமாட்சி தாயின் கமலபாதங்களுக்கு சமர்பித்து தன் ஆத்ம குருநாதரான ஸ்ரீசந்திரசேகரேந்திர சுவாமிகளின் ஆசியுடன், ஸ்ரீசுவாமிஜி கூடி இருந்த அனைவருக்கும் ஆசி வழங்கினார். விழாவிற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் ஸ்ரீ ஸ்வர்ண காமேஸ்வரி சேவா சங்கத்தின் மூத்த உறுப்பினர் நன்றியுரை வழங்கினார்.



# ஸ்ரீலஸ்ரீ காமாக்ஷி சுவாமிகள் - சேவை

மனிதன் தன்னை பெருமைப்படுத்திக் கொள்ள நல்ல கார்யங்கள் கூடியமானவரை செய்வது உத்தமம். மேலும் நம்மிடையே ஏற்படக் கூடிய வேற்றுமைகளுக்கு காரணம் அன்பை தெரிவிக்காததுதான்.

> ஆன்மிக வழியில் நடப்பவன் மௌனத்தை கடைபிடிப்பது சிறப்பு.

நாம் செய்யும் எந்த கார்யங்களுக்கும் நிச்சயம் பலன் உண்டு. பலனை எதிர்பார்த்து செய்வது பகவத் சேவைக்கு மட்டும் பொருந்தாது. எத்தனை பிறவி எடுத்தாலும் நாம் இறைப்பணிக்காகவே என்ற பிரார்த்தனையை செய்ய வேண்டும். நாம் ஒழுக்கத்துடன் உண்மையுடன் செய்யும் சேவையில் பூரண அமைதியை பெற முடியும்.

பல கடவுளர்கள் பல மஹான்கள் இருக்கிறார்கள், நாமும் பல இனங்களாக மொழி, தேசம் மூலம் வேறுபட்டிருக்கிறோம். எப்படி கடவுள் பல ரூபங்களில், நாமங்களில் வேறுபட்டிருந்தாலும் குணத்தில் அன்பு கருணை கொண்டிருப்பதால் நாம் அனைவரும் அன்பை மூலதனமாக் கொண்டு சேவை செய்தால் நாம் மதிப்புள்ள மனிதனாக வாழ முடியும். விளம்பரம் எங்கு இருப்பினும் அங்கு சேவை பூரணமாகாது. இறைவனுக்கு விளம்பரம் கூடாது, நம் புகழ் கூட இறைவனுக்கு அர்ப்பணிப்பது சிறப்பு.

உடல் நலம், குடும்ப ஏற்றுமை, அனைத்து வளங்களுடன் வாழ கூட்டு வழிபாடு மட்டுமே சிறந்தது. மேலும் ஆன்மிக வழியில் நடப்பவன் மௌனத்தை கடைபிடிப்பது சிறப்பு.

உலக நன்மையே நமக்குண்டான பிரார்த்தனையாக கருத வேண்டும்.



## வாலன்ட்ரி சர்விஸ்

SSKSSயில் தன்னார்வ தொண்டாற்ற விரும்புவோர் வெப்சைட்டிலிருந்து வாலன்ட்ரி படிவத்தை பதிவிறக்கம் செய்து கொண்டு, பூர்த்தி செய்து ஆஸ்ரமத்திற்கு அனுப்பி வைக்கவும்.

## அனுபவங்கள்

தங்களுடைய கட்டுரைகள், அனுபவங்கள், குருஜியிடம் நிகழ்ந்த அற்புதங்கள், ஆலோசனைகள், இவற்றை பற்றி அனுப்ப வேண்டிய முகவரி sskssangh@yahoo.co.in

ஸ்ரீ ஸ்வர்ண காமேஸ்வரி சேவா ஸங்க் தகவல் தொடர்பு குழுவினர்களால் இந்த செய்தி தாள் வெளியிடப்படுகிறது

ஜெய் குருதேவ்

ஸ்ரீ ஸ்வர்ண காமேஸ்வரி சேவா ஸங்க்,
ப.எண் 15, பு.எண் 13, 24வது தெரு,
நங்கநல்லூர், சென்னை - 600 061.
இந்தியா. தொ.பே.எண்: 91-44-22324665

To